Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 624/2025 PW-4**

Name : காசிநாதன்
Father / Husband name : கிருஷ்ணன்
Village : திண்டிவனம்
Age : 70
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 10.06.2026

Accused present. Both counsel present. Witness identified by Tindivanam PS HC 1465 Tr.Manimaran.

**முதல் விசாரணை**

நான் தற்போது விவசாய வேலை செய்துவருகிறேன். சாட்சி ராமச்சந்திரன் என்பவரை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். 2வது சாட்சி கையொப்பம் எனது மகன் ராமச்சந்திரனுடையது. கடந்த 2024 ம் வருடம் தேதி மாதம் நினைவில்லை காலை சுமார் 08.30 மணியளவில் ராமதாஸ் நகரிலுள்ள எனது வீட்டிலிருந்தபோது சண்டை நடந்த ஆஜர் எதிரியின் வீட்டின் அருகே படம் வரைந்துகொண்டு எனது வீட்டில் வந்து போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. **பார்வை மகசரில் உள்ள 1வது சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கின் குற்ற எண் தெரியுமா என்றால் தெரியாது, சண்டை வழக்கு.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 624/2025 PW-5**

Name : ராமச்சந்திரன்
Father / Husband name : காசிநாதன்
Village : ராமதாஸ் நகர்
Age : 37
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 10.06.2026

Accused present. Both counsel present. Witness identified by Tindivanam PS HC 1465 Tr.Manimaran.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது தனியார் கம்பெனியில் வேலை செய்துவருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். 1வது சாட்சி கையொப்பம் எனது அப்பாவுடைது. சுமார் 2 வருடத்திற்கு முன்பு நான் எனது வீட்டிலிருந்தபோது திண்டிவனம் காவல் நிலைய போலிசார் வந்து சண்டை சம்மந்தமாக விசாரித்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. **பார்வை மகசரில் உள்ள 2வது சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது 17.12.2024 அன்று மாலை 8 மணியளவில் என் முன்பு எனது அப்பா காசிநாதன் முன்பு திண்டிவனம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் இந்த வழக்கின் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம்

வரைந்து தயார் செய்த பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் செய்ததாக சொல்லிவிட்டு எதிரி கேட்டுக்கொண்டதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**நீதிமன்ற கேள்வி** - அ.சா.4 காசிநாதன் யார் என்றால் எனது அப்பா. சாமிநாதன் யார் என்றால் எனக்கு தெரியாது.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.